# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்:306/பேரூ/2025**
**நாள் : 10.12..2025**

T. உமாபதி,
கும்மிடிப்பூண்டி,
திருவள்ளூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, எண். 20, மணியக்காரர் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. T. உமாபதி என்பவரது 22.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.07.2025 அன்று பெறப்பட்டு, 306/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி எண். 20, மணியக்காரர் தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. T. உமாபதி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 22.07.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் கோரிக்கைகளை தெரிவித்துள்ளார்.

1. சாலை ஓரம் வடிகால் கழிவுநீர் சாலையில் கலக்கிறது.
2. சாலை மற்றும் வடிகால் வேண்டி.

மேலும், மேற்படி மனுவுடன் அனுப்பியுள்ள ஆவணத்தில் பழைய கும்மிடிப்பூண்டி மணியக்கார தெருவாழ் பொதுமக்கள், 16.08.2023 நாளிட்டு கும்மிடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

“நாங்கள் கும்மிடிப்பூண்டி பேரூராட்சி வார்டு 11-ல் வரும் மணியக்கார தெருவில் சுமார் 50 குடும்பங்களுக்கு மேலாக பல ஆண்டுகளாக வசித்து வருகிறோம். எங்கள் தெருவில் சாலை மற்றும் வடிகால் வசதி அமைப்பதற்காக எங்களுடைய நிலங்கள் தானமாக பேரூராட்சி நிர்வாகத்திற்கு அளிக்கப்பட்டு கடந்த 1998ஆம் ஆண்டு சாலை மற்றும் வடிகால் வசதி அமைத்து கொடுக்கப்பட்டது. ஆனால் சுமார் 5 ஆண்டுகளுக்கு மேலாக சாலை சிதலமடைந்தும், வடிகால்வாயில் சரிவர கழிவுநீர் வடியாமல் சாலையில் கழிவுநீர் பாய்ந்து கொண்டு இருக்கின்றது. மேலும் மழைக்காலங்களில் மழைநீர்

மற்றும் கழிவுநீர் சாலையில் குளம்போல் தேங்கி நீர் வடியாத சூழல் ஏற்படுகிறது. இதனால் சுகாதார சீர்கேட்டால் உருவாக்கும் கொசுக்களின் மூலம் இப்பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருவித மர்மமான காய்ச்சல் பரவி பெரியவர்கள் மற்றும் குழந்தைகளை காய்ச்சலில் பாதிக்கப்பட்டுள்ளனர். மழைக்காலங்களில் வேலைக்கு செல்வோர் மற்றும் 100க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் இச்சாலை வழியே கடந்து வேலைக்கு மற்றும் பள்ளிக்கு செல்வதற்கு பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே இந்த அசாதாரண சூழ்நிலை கருத்தில் கொண்டு மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாக போர்க்கால அடிப்படையில் சாலை மற்றும் வடிகால் வசதி அமைத்து தருமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்."

2. முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.08.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ம. பாஸ்கரன் என்பவர் தனது 04.09.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 150/2025/அ1–ல் மனுதாரரின் கோரிக்கைகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட மணியக்கார தெருவில் கழிவு நீர் தேங்குவதாகவும், அப்பகுதியில் வடிகால் மற்றும் சாலை வசதியினை அமைத்து தர கோரியும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மூலம் திரு. T. உமாபதி என்பவர் புகார் மனு அளித்ததற்கு கீழ்க்கண்டவாறு நடவடிக்கை விவரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி 11வது வார்டிற்குட்பட்ட மணியக்கார தெருவில் உள்ள கால்வாயினை அகற்றி விட்டு புதியதாக கால்வாய் கட்டுவதற்கு மற்றும் சாலையினை புதுப்பித்து போடுவதற்கு கும்மிடிப்பூண்டி பேரூராட்சி மன்ற தீர்மானத்தால் (தீர்மான எண். 415, நாள் 28.03.2025) ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து மணியக்கார தெருவில் மழைநீர் கால்வாய் கட்டுவதற்கு ரூ.15.60 இலட்சம், சாலை அமைப்பதற்கு ரூ.15.70 இலட்சம் என பொறியாளரால் மதிப்பீடு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பணிகள் திட்ட நிதியிலோ அல்லது பொது நிதியிலோ பணிகள் செய்வதற்கு கருத்துரு அனுப்பி வைத்து நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. T. உமாபதி மற்றும் எதிர்மனுதாரரான கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 07.11.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 31.10.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இதற்கிடையில் எதிர்மனுதாரரான கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ம. பாஸ்கரன் என்பவர் தனது 06.11.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 150/2025/அ1-ல் மனுதாரரின் கோரிக்கைகளுக்கு முறையே கீழ்க்காணும் கூடுதல் விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

"கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி 11வது வார்டிற்குட்பட்ட மணியக்கார தெருவில் உள்ள கால்வாயினை அகற்றி விட்டு புதியதாக கால்வாய் கட்டுவதற்கு மற்றும் சாலையினை புதுப்பித்து போடுவதற்கு இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண். 415 நாள் 28.03.2025ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து மணியக்கார தெருவில் மழைநீர் கால்வாய் கட்டுவதற்கு ரூ.15.60 இலட்சம் சாலை அமைப்பதற்கு ரூ.15.70 இலட்சம் என பொறியாளரால் மதிப்பீடு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது 2025-2026ஆம் ஆண்டிற்கு பெருநிறுவன சமூக பொறுப்பு

(CSR) நிதியின் மூலம் மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்திட ரூ.31.30 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி கோரி பேரூராட்சி அலுவலக 25.09.2025 நாளிட்ட கடித ந.க. எண். 39/2025 வாயிலாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

எனவே மேற்படி பணிகள் திட்ட நிதியிலோ அல்லது பொதுநிதியிலோ மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரரான திரு. T. உமாபதி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

7. எதிர்மனுதாரரான கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ம. பாஸ்கரன் என்பவர் 07.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11-ல் அமைந்துள்ள மணியக்கார தெருவில் உள்ள மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கால்வாயினை அகற்றிவிட்டு புதியதாக கால்வாய் கட்டுவதற்கும் மற்றும் சாலை அமைப்பதற்கும் பேரூராட்சி மன்றத்தில் 28.03.2025 (தீர்மான எண். 415) அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- இத்தீர்மானத்தின்படி மணியக்கார தெருவில் மழைநீர் வடிகால் கட்டுவதற்கு ரூ.15.60 இலட்சம் மற்றும் சாலை அமைப்பதற்கு ரூ.15.70 இலட்சம் என பொறியாளரால் மதிப்பீடு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

- கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி 11வது வார்டிற்குட்பட்ட மணியக்கார தெருவில் உள்ள கால்வாயினை அகற்றிவிட்டு புதியதாக கால்வாய் கட்டுவதற்கு மற்றும் சாலையினை புதுப்பித்து போடுவதற்கு 2025-2026ஆம் ஆண்டிற்கு பெருநிறுவன சமூக பொறுப்பு (CSR) நிதியின் மூலம் மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்திட மொத்தம் ரூ.31.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யக் கோரி திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டதும் பணிகள் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்''. என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் திரு. T. உமாபதி என்பவரின் மனு மற்றும் எதிர்மனுதாரரான கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை செயல் அலுவலரின் அறிக்கைகள் மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. T. உமாபதி என்பவர் தனது 22.07.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11-ல், மணியக்கார தெருவில் அமைந்துள்ள கழிவுநீர் வடிகாலானது கடந்த 5 ஆண்டுகளாக சிதலமடைந்து சாலையில் கழிவுநீர் செல்வதால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு விளைவிப்பதாக புகார் தெரிவித்து, கழிவுநீர் வடிகால் மற்றும் சாலையினை அமைக்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரரின் கோரிக்கையான கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி 11வது வார்டிற்குட்பட்ட மணியக்கார தெருவில் உள்ள பழுதடைந்த கால்வாயை அகற்றி, புதியதாக கால்வாய்கள் மற்றும் சாலைகள் அமைப்பதற்கு கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் (தீர்மான

எண். 415 நாள் 28.03.2025) நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, மணியக்கார தெருவில் மழைநீர் வடிகால் கட்டுவதற்கு ரூ.15.60 இலட்சம் மற்றும் சாலை அமைப்பதற்கு ரூ.15.70 இலட்சம் என பொறியாளரால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது. மேலும், மேற்காணும் மழைநீர் வடிகால் அமைத்திடவும் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்திடவும் ரூ.31.30 இலட்சம் தொகையினை 2025-26ஆம் ஆண்டிற்கு பெருநிறுவன சமூக பொறுப்பு (Corporate Social Responsibility Fund – CSR) நிதியின் மூலம் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 25.09.2025 நாளிட்ட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது.

மேற்படி நிதியானது ஒப்பளிப்பு பெறப்பட்டவுடன் மழைநீர் வடிகால் மற்றும் சாலை பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி எவ்வித தாமதமின்றி உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. T. உமாபதி,
எண். 20, மணியக்காரர் தெரு,
கும்மிடிப்பூண்டி - 601 201, திருவள்ளூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
கும்மிடிப்பூண்டி தேர்வுநிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

**நகல்**

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/12/25
செயலாளர்